**JobAccess**
**Driving disability employment**

# தகவல் ஏடு
# வேலை தரும் பணியமர்த்துனர்களுக்குக் கிடைக்கும் சேவைகள் மற்றும் திட்டங்கள்

உடலியலாமை உள்ளவர்களைத் தமது பணியிடத்தில் வேலைக்கு அமர்த்தி அவர்களைத் தக்க வைத்துக் கொள்ளப் பணியமர்த்துனர்களுக்கு உதவும் சேவைகளும் திட்டங்களும் பலவுள்ளன. பின் வருவன இவற்றில் உள்ளடங்கும்:

**‘தேசிய உடலியலாமை ஒருங்கிணைப்பு அதிகாரிகள்’ (National Disability Coordination Officers)** எனும் அமைப்பினால் பாடசாலைகளுக்கும் அரசாங்க வேலைவாய்ப்பு ஒத்தாசைக்கும் இடையே தொடர்பு ஏற்புடுத்திக் கொடுக்கவும், படிப்பு மற்றும் வேலைக்கான வழித்தடங்களை அபிவிருத்தி செய்யவும் இயலும்.

**‘ஆதரவுதவி பெற்ற ஊதிய முறைமை’ (Supported Wage System)** என்பது வேலையில் அமர்த்தப்பட்டுள்ள உடலியலாமை உள்ள ஒருவரது உற்பத்தித் திறனையும் அவரது ஊதியத்தையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய உங்களுக்கு உதவுகிறது. வேலை செய்யும் திறன் குறைந்து விட்டதன் காரணமாக வேலைக்கு ஆபத்து இருக்கக்கூடிய தற்போதைய பணியாளர்களுக்கும் இந்த வசதி கிடைக்கும்.

**‘உடலியலாமையுடைய அவுஸ்திரேலியத் தொழிற்பயிற்சியாளர் ஊதிய உதவி’ (Disabled Australian Apprenticeship Wage Support)** எனும் திட்டம் உடலியலாமையுடைய தகுதிபெறும் தொழிற்பயிற்சி பெறுபவர்களது பணியமர்த்துனர்களுக்குக் கொடுப்பனவு ஒன்றை அளிக்கிறது.

**‘பணியிட தனிநபர் ஒத்தாசை’ (Work Based Personal Assistance)** எனும் திட்டமானது தமது உடலியலாமை அல்லது மருத்துவ நிலையின் காரணமாக தொடர்ந்த உதவி தேவைப்படுபவர்களுக்கு ஆகும் பணியிட ஆதரவு சேவைகளில் உதவுகிறது.

**‘போக்குவரத்துப் படித்தொகை’ (Transport Allowance)** என்பது மருத்துவ நிலை ஒன்றின் காரணமாக பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பாவிக்க இயலாது என்று கூறும் மருத்துவச் சான்று ஒன்றை வைத்திருக்கும் பணியாள் ஒருவர் உங்களிடம் இருந்தால் உங்களுக்கு உதவும்.

**‘தேசிய வேலை அனுபவத் திட்டம்’ (National Work Experience)** எனும் திட்டத்தினால் உங்களுடைய வேலைச் சூழல்களில் உடலியலாமை உள்ளவர்கள் எப்படி இயங்குவார்கள், மற்றும் வெவ்வேறு விதமான வேலைகளை அவர்கள் எவ்வாறு செய்வார்கள் என்பதை நீங்கள் அவதானிப்பதற்கான வாய்ப்பினை உங்களுக்கு அளிக்க இயலும்.

**‘சமூக அபிவிருத்தித் திட்டம்’ (Community Development Program)** என்பதினால் உங்களுடைய தொழிலின் தேவைகளுக்கு ஏற்ற ஆட்களை, உடலியலாமை உள்ளவர்கள் உள்ளடங்க, தொலைதூர அவுஸ்திரேலியப் பகுதிகளில் தேடுவதில் உங்களுக்கு உதவ இயலும்.

இச் சேவைகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, அல்லது உங்களது பணியிடத்திற்காக உடலியலாமை உள்ளோருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வேலைவாய்ப்புத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au

---

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**

எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது ‘ஜாப்-அக்ஸெஸ்’ அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.